بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/04/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ.

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ அத்தீ பின் கஃஅப் பின் லோயீ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அன்னாரின் தந்தையார் பெயர் 'கத்தாப் பின் நுஃபைல்'. தாயார் பெயர் ஹன்த்தமா பின்த் ஹாஷிம்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிறந்த தேதி குறித்து பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. உதாரணமாக, ஒரு கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெரும் ஃபுஜ்ஜார் போருக்கு 4 வருடங்களுக்கு முன்பு; அல்லது இன்னொரு கருத்துப்படி, 4 வருடங்களுக்குப் பிறகு பிறந்தார்கள். ஓர் அறிவிப்பில் அன்னாரின் பிறந்த ஆண்டு ஆமுல் ஃபீல் (அதாவது யானைப் போர் நடந்த வருடமான) கி.பி 570 க்கு 13 வருடத்திற்குப் பிறகு, அதாவது கி.பி 583 என்று கூறப்பட்டுள்ளது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நுபுவ்வத்தின் ஆறாம் ஆண்டு 26 வயதில் இஸ்லாத்தை ஏற்றார்கள். இவ்வாறு அன்னாரின் பிறந்த வருடம் கி.பி 590 ஆகிறது. மற்றோர் அறிவிப்பு இதுவாகும்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 21 வயது இருக்கும் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிறந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் புனைப்பெயர் அபூ ஹஃபஸ்.

ஒரு முறை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'உங்களுக்கு ஃபாரூக் எனும் பட்டம் எவ்வாறு வழங்கப்பட்டது?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, மஸ்ஜித் ஹராமில் அபூ ஜஹ்லை வில்லால் அடித்துக் காயப்படுத்தியதற்கு மூன்றாம் நாள் நான் வெளியில் சென்றேன். வழியில் மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருநபர் மூலமாக எனது சகோதரியும், சகோதரியின் கணவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று தெரிய வந்தது.

இதைக் கேட்டு நான் எனது சகோதரி வீட்டிற்குச் சென்றேன். அங்கு ஏதோ வாசிக்கப்படும் மெல்லிய ஓசை எனக்குக் கேட்டது. நான் உள்ளே நுழைந்தேன். அங்கு விவகாரம் முற்றிப் போன பிறகு, நான் எனது சகோதரியின் கணவருடைய தலையைப் பிடித்து, அவரை அடித்து அடித்து ரத்தம் வரவைத்து விட்டேன்.' சகோதரி காயமுற்றதாகவும் ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ''ரத்தம் வழியக் கண்டு எனக்கு வெட்கம் ஏற்பட்டது. நான் அமர்ந்து

கொண்டேன். நீங்கள் படித்துக் கொண்டிருந்த நூலை எனக்குக் காட்டுங்கள் என்று கூறினேன். எனது சகோதரி, 'முதலில் நீங்கள் குளியுங்கள்' என்று கூறினார்.

நான் குளித்த பிறகு அவர்கள் அந்த மறையின் சுவடிகளை எனக்காக வெளியே எடுத்தார்கள். அவை சூரா தாஹாவின் வசனங்கள் 2 முதல் 9 வரை இருந்தன. எனது உள்ளத்தில், அதன் மகத்துவத்தின் பெரும் தாக்கம் ஏற்பட்டது. நான் உடனடியாக அங்கிருந்து 'தாரே அர்க்கம்' சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஆஜராகி, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். இதைக் கண்ட அனைத்து சஹாபாவும் அல்லாஹு அக்பர் என்று முழங்கினார்கள். அதை மக்கத்தினர் கேட்டனர். இதற்குப் பிறகு நாங்கள் இரண்டு வரிசைகளாக அணிவகுத்து மஸ்ஜித் ஹராமில் நுழைந்தோம். ஒரு வரிசையில் நான் இருந்தேன். மற்றோரு வரிசையில் ஹம்ஸா இருந்தார்கள். குறைஷியர்கள் என்னையும் ஹம்ஸாவையும் பார்த்த போது, இதற்கு முன் ஏற்பட்டிராத அளவு கடுமையான துயரமும் வேதனையும் அவர்களுக்கு ஏற்பட்டது.

அன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு 'ஃபாரூக்' அதாவது, உண்மைக்கும் பொய்யுக்கும் மத்தியில் வித்தியாசத்தை ஏற்படுத்துபவர் என்று பெயரிட்டார்கள்.'' அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாரே அர்க்கமில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கடைசி நபராவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குதிரை சவாரியிலும் குத்துச் சண்டையிலும் திறமைபெற்றவர்களாக இருந்தார்கள். உயரமான மற்றும் வலிமையான உடலைக் கொண்டிருந்தார்கள். குறைஷியர்களின் எழுதப்படிக்கத் தெரிந்திருந்த அந்த 17 பேரில் ஒருவராக இருந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் குறைஷியர்கள் தரப்பிலிருந்து தூதராக செல்லும் பொறுப்பு அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தோடு கடுமையான பகைமை இருந்தது. ஆனால், அவர்களிடம் ஆன்மீக தகுதியும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அன்னாரின் சஹாபாவுக்கும் துன்பங்களை இழைத்து வந்த பொழுதிலும், அவர்களுக்குள் உருக்கம் எனும் உணர்வும் இருந்தது. ஆக, அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் நிகழ்ந்த இரவு, இருளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்காவை வலம் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு சஹாபியாவை பயண ஏற்பாடுகளோடு எங்கோ செல்லக் கண்டார்கள். கேட்கப்பட்ட போது, அந்த சஹாபியா கூறினார்:

'உமர்! உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் நாங்கள் இங்கே இருப்பது பிடிக்கவில்லை. இங்கு எங்களுக்கு ஒரே இறைவனை வணங்குவதற்கு சுதந்திரம் இல்லை. எனவே தான் நாங்கள் தாய்நாட்டை விட்டுச் செல்கிறோம்.'

இந்த பதிலைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எந்த அளவு உருக்கம் ஏற்பட்டதென்றால், அன்னார் வேறுபக்கம் முகம் திருப்பிக் கொண்டு, 'நல்லது, செல்லுங்கள்! இறைவன் உங்கள் பாதுகாவலனாக இருப்பானாக!' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆவும் செய்தார்கள்: 'அல்லாஹ்வே! இந்த இருவரில் அதாவது, அபூ ஜஹ்ல் மற்றும் உமர் பின் கத்தாப் ஆகியோரில், உனக்கு அதிகம் பிரியமானவர் மூலமாக இஸ்லாத்திற்கு கண்ணியமளிப்பாயாக!' நுபுவ்வத்தின் ஆறாம் ஆண்டு ஸுல் ஹஜ்ஜா மாதம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது, அந்த நேரத்தில் மக்காவில் முஸ்லிம் ஆண்களின் எண்ணிக்கை 40. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கினார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'முஹம்மதே! (ஸல்) உமர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதனால் வானவர்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்குக் காரணமாக அமைந்த பல்வேறு நிகழ்வுகளும் அறிவிப்புகளும் ஹதீஸ் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, அபூ ஜஹ்ல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்பவருக்கு மிகப் பெரும் பரிசு வழங்குவதாக அறிவிப்பு செய்தான். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உருவிய வாளை ஏந்திக் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் நோக்கத்தில் புறப்பட்டார்கள். வழியில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கன்று அறுக்கப்படுவதைக் கண்டார்கள். அதன் வயிற்றிலிருந்து இவ்வாறு ஓசை வரக் கேட்டார்கள்:

'ஸரீஹ் குடும்பத்தைச் சேர்ந்தவரே!' ஸரீஹ் அந்தக் கன்றுடைய பெயராகும். 'அழைக்கக்கூடிய ஒருவர் அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்திற்கும் சாட்சி பகர்வதன் பால் அழைக்கிறார்.' ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இது என்னைப் பார்த்துக் கூறப்படுகிறது' என்று நினைத்தார்கள். *ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்*: இந்த அறிவிப்பு சஹீஹானது என்றால், இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்பொழுது அங்கு கண்ட ஏதோ ஆன்மிகக் காட்சியாகத் தெரிகிறது. பிறிதோர் அறிவிப்பு இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:

ஓர் இரவு மஸ்ஜித் ஹராமில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தொழுகையில் மூழ்கியிருக்கக் கண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'சூரா ரஹ்மான்' ஓதிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் திருக்குர்ஆனைக் கேட்ட போது, அதன் காரணமாக எனது உள்ளம் உருகிவிட்டது. நான் அழுதுவிட்டேன். இஸ்லாம் என்னுள் நுழைந்துவிட்டது.'

இதே போன்று ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஓர் இரவு எனது சகோதரிக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. அப்போது நான் துஆ செய்வதற்காக கஅபாவின் திரைகளோடு ஒன்றிப்போனேன்.'

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் ஓதுவதைக் கேட்டார்கள். அந்த மறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்ட போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் செல்ல ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைப் பார்த்த போது, 'உமரே! நீ என்னை இரவிலும் விடுவதில்லை; பகலிலும் விடுவதில்லை.' என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு எதிராக பிரார்த்தனை ஏதும் செய்து விடப்போகிறார்கள் என்று அஞ்சி, உடனடியாக ஷஹாதத் கலிமா கூறிவிட்டார்கள்.

பிறிதோர் அறிவிப்பில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கிறது. ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'சூரா ஹாக்கா' ஓதக் கேட்டார்கள். அப்போது திருக்குர்ஆனின் அமைப்பையும் வரிசைக்கிரமத்தையும் கண்டு வியப்படைந்து, 'இறைவன் மீதாணையாக! இதுவோ ஏதோ கவிஞரின் கூற்று' என்று நினைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் இவ்வாறு நினைத்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை ஓதினார்கள்:

إِنَّهُۥ لَقَوْلُ رَسُولٍ كَرِيمٍ ۝٤١ وَمَا هُوَ بِقَوْلِ شَاعِرٍ ۚ قَلِيلًا مَّا تُؤْمِنُونَ ۝٤٢

அதாவது, 'நிச்சயமாக இது கண்ணியத்திற்குரிய தூதரின் கூற்றாகும். இது எந்தவொரு கவிஞரின் கூற்றும் அல்ல.' ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இதைக் கேட்ட நான், ‘இவரோ காஹின்! அதாவது, குறிசொல்பவர்’ என்று நினைத்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதை ஓதினார்கள்:

وَلَا بِقَوْلِ كَاهِنٍ ؕ قَلِيْلًا مَّا تَذَكَّرُوْنَ ﴿٤٣﴾

அதாவது, ‘இது எந்தவொரு குறிசொல்பவருடைய கூற்றும் அல்ல. நீங்கள் அறவே நம்பிக்கை கொள்வதில்லை.’ ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘அந்த நேரம் முதல் இஸ்லாம் எனது உள்ளத்தில் குடி புகுந்து விட்டது.’

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக உள்ள அறிவிப்புகளைத் திறனாய்வு செய்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:** ‘‘வரலாற்று நூல்களிலும் வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. இந்த அறிவிப்புகளை சரியானவை எனப் புரிந்தவர்கள்; இவற்றை எடுத்துரைத்துள்ளனர். நாமோ ‘சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் வீட்டில் நடந்த விஷயம்; பிறகு அங்கிருந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாரே அர்க்கம் சென்றது’ தொடர்பாக கூறப்பட்டுள்ள அந்த அறிவிப்பையே சரியானதாக ஏற்கிறோம்.

மேற்கூறப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் தத்தமது இடத்தில் சரியாக இருப்பதற்கு சாத்தியமுள்ளது. அவற்றிலிருந்து, பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் மனமாற்ற நிகழ்வுகள் ஏற்பட்டு வந்தன என்பது புலப்படுகிறது. சகோதரியின் வீட்டில் திருக்குர்ஆனைக் கேட்டதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக நுபுவ்வத்தின் அவையில் ஆஜரானதும் தான் கடைசியில் நிகழ்ந்த சம்பவம்.’’

*குத்பாவின் இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு இனிவரும் காலங்களில் தொடரும் என்று கூறிய பிறகு, பின்வரும் மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களின் ஜனாஸா காயிப் தொழவைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.*

அஹ்மதிய்யா ஜமாஅத் யமனின் சத்ர் மதிப்பிற்குரிய அஹ்மத் முஹம்மத் உஸ்மான் ஷுபூத்தீ சாஹிப் அவர்கள். இவர்கள் ஏப்ரல் 9 அன்று, 87 வயதில் எகிப்தில் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஜல்ஸா சாலானா அலுவலகத்தின் கணக்காளர் மதிப்பிற்குரிய குறைஷி ஸகாவுல்லாஹ் சாஹிப் அவர்கள். இவர்களும் ஏப்ரல் 9 அன்று 87 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மலிக் காலிக் தாத் சாஹிப் அவர்கள். இவர்கள் 85 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

நஸாரத் உமூரே ஆம்மாவின் ஊழியர் மதிப்பிற்குரிய முஹம்மத் சலீம் சாபிர் சாஹிப் அவர்கள். இவர்கள் மார்ச் 27 அன்று 77 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீஃப் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய நயீமா லத்தீஃப் சாஹிபா அவர்கள். மர்ஹூமா மார்ச் 10 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். கனடாவைச் சேர்ந்த முஹம்மத் ஷரீஃப் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய சஃபிய்யா பேகம் சாஹிபா அவர்கள். மர்ஹூமா மார்ச் 11 அன்று 80 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیْهِ رٰجِعُوْنَ

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர் படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمکم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னி)**